தினமணி

# அரிசி விலை கடும் உயர்வு

First Published : 11 Jul 2012 03:55:14 AM IST



இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை இதுவரை போதிய அளவு பெய்யாததால் குறுவை சாகுபடி பரப்பளவு மிகவும் குறைந்துவிட்டது. அரிசி விலை உயர்வுக்கு இது முக்கிய காரணமா

சென்னை, ஜூலை 10: தமிழகத்தில் அரிசி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அரிசி விலையைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தலையிட்டு போர்க் கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகளும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக அரிசி விலை படிப்படியாக உயர்ந்து வருகிறது. இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை இதுவரை போதிய அளவு பெய்யாததால் குறுவை சாகுபடி பரப்பளவு மிகவும் குறைந்துவிட்டது. அரிசி விலை உயர்வுக்கு இது முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

கடந்த ஒரு மாதத்தில் ரகத்துக்கேற்ப ஒரு மூட்டைக்கு ரூ.300 முதல் ரூ.400 வரை விலை உயர்ந்துள்ளது. மேலும் விலை உயரக் கூடும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

தற்போது உயர்ந்துள்ள அரிசி மொத்த விற்பனை விலை: (75 கிலோ கொண்ட மூட்டை- பழைய விலை அடைப்புக்குள்) பாபட்லா 2,400 (2,000), சிகப்பு பொன்னி 2,000 (1,600), அதிசய பொன்னி 2,000 (1700), ஏ.டி.டி. குண்டு இட்லி அரிசி 1,800 (1,400), பச்சை அரிசி சன்னரகம் 1,700 (1300).

சில்லறை விற்பனை விலை (ஒரு கிலோ) : பாபட்லால் ரூ.28-ல் இருந்து 34 வரை, சிகப்பு பொன்னி ரூ.27-31, அதிசய பொன்னி ரூ.23- 30, ஏ.டி.டி. குண்டு இட்லி அரிசி ரூ.20- 26, பச்சை அரிசி சன்ன ரகம் ரூ.30-ல் இருந்து 38 வரை.

இதுதவிர 25 கிலோ எடை கொண்ட பைகள் ரூ.100 முதல் 200 வரை விலை உயர்ந்துள்ளன. பாசுமதி அரிசி முதல் ரகம் கிலோ ரூ.70 முதல் 80 வரையிலும், 2-வது ரகம் ரூ.60- 70, 3-வது ரகம் ரூ.50- 60 வரை விற்கப்படுகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு அனைத்து மளிகை கடை வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியதாவது:

தமிழகத்தில் நெல் உற்பத்தி குறைந்துள்ளதால் மாநிலத்தின் அரிசி தேவையில் 60 சதவீதம் கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் இருந்து வரவழைக்கப்படுவதன் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. அதுவும் தற்போது குறைந்து வருகிறது. ஒரு நாளைக்கு 500 லாரிகள் வரை வரவழைக்கப்பட்ட அரிசி தற்போது 50-ல் இருந்து 100 லாரிகள் மட்டுமே வரவழைக்கப்படுகின்றன.

வெளிநாடுகளுக்கு பாசுமதி அரிசி மட்டுமே ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற விதிமுறை மீறப்பட்டு சன்னரக உள்ளூர் பயன்பாட்டு அரிசியும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதுவும் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக உள்ளது என்றார்.

செங்குன்றம் நெல் அரிசி மொத்த வியாபாரிகள் சங்க துணைத் தலைவர் எம்.ஜெயபாலன் கூறியதாவது: அரிசி ஆலைகள் நாளுக்கு நாள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றன.

செங்குன்றத்தில் கடந்த பல ஆண்டுகளாக 150-க்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் இயங்கி வந்தன. தற்போது வெறும் 35 ஆலைகளே மிஞ்சியுள்ளன. ஆள் பற்றாக்குறை, இடைத் தரகர்களின் குறுக்கீடு, மின் பற்றாக்குறை உள்ளிட்ட பல காரணங்களால் ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. இதனால் உள்ளூர் கொள்முதல் முழுமையாக நடைபெறவில்லை.

பல விவசாயிகள் இடைத் தரகர்கள் மூலம் தங்களது நெல்லை வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்கின்றனர். அதே அரிசியை நாம் கூடுதல் விலை கொடுத்து வெளிமாநிலங்களில் இருந்து மீண்டும் வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. மேலும் வெளிமாநிலங்களில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாலும் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. அதைத் தடுக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## விலையில்லா கறவை மாடுகளுக்கு மருத்துவ முகாம்

First Published : 11 Jul 2012 09:12:04 AM IST

ஸ்ரீபெரும்புதூர், ஜூலை 10: தமிழக அரசின் சார்பாக வல்லக்கோட்டை ஊராட்சியில் வழங்கப்பட்ட, விலையில்லா கறவை மாடுகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை முகாம் அண்மையில் நடைபெற்றது. முகாமில் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா கலந்துக்கொண்டு முகாமை துவக்கிவைத்தார்.

 தமிழக அரசு சார்பாக வல்லக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த 53 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டன. இந்த கறவை மாடுகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை முகாம் துவக்க விழா, வல்லக்கோட்டை ஊராட்சியில் நடைபெற்றது. முகாமிற்கு கால்நடை துறை இயக்குனர் தர்மேந்திரயாதவ் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஹனீஸ் சாப்ரா,ஸ்ரீபெரும்புதூர் சட்டபேரவை உறுப்பினர் மொளச்சூர் ரா.பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டி.கே.எம். சின்னைய்யா சிறப்பு அழைப்பாளராக கலந்துக்கொண்டு மருத்துவ சிகிச்சை முகாமை துவக்கிவைத்தார். முகாமில் கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம், இனவருத்தி ஊசி போடப்பட்டது.

 முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் கோவரதன், உதவி இயக்குனர் பன்னீர்செல்வம், காஞ்சிபுரம் எம்எல்ஏ சோமசுந்தரம், வாலாஜாபாத் எம்எல்ஏ கணேஷன், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றிய குழு தலைவர் வெங்கடேசன், துணைத்தலைவர் சிவக்குமார், கவுன்சிலர்கள் பாபு, பாலமுருகன், ஸ்ரீபெரும்புதூர் கால்நடை மருத்துவமனை மருத்துவர் ரேணுகா, தண்டலம் கால்நடை மருத்துவமனை மருத்துவர் அசோகன், வல்லக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் வனஜா, துணைத்தலைவர் அன்பு உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

## மல்லிகை பயிரில் பூச்சி மேலாண்மை: வம்பனில் ஜூலை 17-ல் பயிற்சி

First Published : 10 Jul 2012 01:09:16 PM IST

புதுக்கோட்டை, ஜூலை 9: வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மல்லிகை செடிகளில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்த ஒரு நாள் பயிற்சி ஜூலை 17-ல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

 இது குறித்து மாவட்ட ஆட்சியர் வி.கலைஅரசி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

 புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆலங்குடி, புதுக்கோட்டை வட்டங்களில் மல்லிகை மலர் சுமார் 28 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. ஒவ்வொரு விவசாயியும் 100 செடிகளுக்கு மேலாக வளர்த்து வருகின்றனர். இதில் பூக்கள் பருவ காலங்களை பொறுத்து தினந்தோறும் அல்லது ஒரு நாள் இடைவெளியில் அறுவடை செய்து வருகிறார்கள். இதனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தினந்தோறும் மகசூலை பொறுத்து நல்ல வருவாய் கிடைக்கிறது. இந்த நிலையில் மல்லிகைச் செடிகளை பல்வேறு வகையான பூச்சிகளாகிய மொட்டுப் புழு, இலைப்பேன், தத்துப் பூச்சிகள், இலை மடக்கும் புழு, செஞ்சிலந்திகள் ஆகிய பூச்சிகள் இலைகள் மற்றும் நூற்புழு போன்றவை வோ்களையும் தாக்கி செடிகளை சேதப்படுத்தி விவசாயிகளுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்துவது அதிகரித்து வருகிறது. இந்த நோய்களின் தாக்குதல்களை புதிய

தொழில்நுட்பங்கள் மூலம் மேலாண்மை செய்தால் இழப்பை கட்டுப்படுத்தி வருவாய் ஈட்ட முடியும். எனவே, இது தொடர்பாக வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வருகிற 17-ம் தேதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை ஒரு நாள் பயிற்சி நடைபெறுகிறது.
பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மல்லிகை சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் செடிகளில் பூச்சிகளின் தாக்குதல் இருந்தால் அந்த செடிகளை கொண்டு வந்து பயன் பெற முடியும். மேலும், விவரங்களுக்கு 04322-290321 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

## முறைகேடாக உரம் விற்றால் உரிமம் ரத்து: வேளாண்துறை எச்சரிக்கை

First Published : 10 Jul 2012 10:54:44 AM IST

தூத்துக்குடி, ஜூலை 9: தூத்துக்குடி மாவட்டத்தில் முறைகேடாக உரம் விற்பனையில் ஈடுபடும் விற்பனையாளர்களின் உரிமம் ரத்து செய்யப்படுமென வேளாண்துறை எச்சரித்துள்ளது.
இதுதொடர்பாக தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்சிங் தனராஜ், வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) செ.மதியழகன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
இம் மாவட்டத்தில் உரம் விற்பனை செய்யும் மொத்த விற்பனையாளர்களும், கூட்டுறவு நிறுவனங்களும், சில்லரை விற்பனையாளர்களும், விவசாயிகள் மீது அக்கறை கொண்டு வியாபாரம் செய்ய வேண்டும். யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரத்தை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்துவார்கள். விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யும்போது, விற்பனை ரசீது கண்டிப்பாக கொடுக்க வேண்டும். ரசீதில் விவசாயி பெயர் பதிவு செய்யப்பட்டு அதற்கான தொகை குறிப்பிடப்பட வேண்டும். இருப்புப் பதிவேடு பராமரிக்க வேண்டும். கொள்முதல் ரசீது இல்லாமலும், முறையான ஆவணங்கள் இல்லாமல் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு வைத்து இருந்தால் தடை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், நுண்ணூட்ட உரம் மற்றும் கலப்பு உரம் கொள்முதல் செய்த உடன் தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை அலுவலர்(தரக்கட்டுப்பாடு) தகவல் கொடுத்து மாதிரி எடுக்க அறிவுறுத்த வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் விவசாயிகளுக்கு தரமற்ற உரங்கள் போய் சேர்ந்து விடக்கூடாது. உரிமத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட உரங்களை மட்டும்தான் இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும். விற்பனை நிலையங்களில் கொள்முதல் ரசீது, விற்பனை ரசீது, இருப்பு பதிவேடு முறையாக பராமரிக்க வேண்டும். மேலும், உர இருப்பு அறிக்கையை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்துக்கு மாதம்தோறும் அனுப்பி வைக்க வேண்டும். சட்டத்துக்குப் புறம்பாக நடக்கும் நபர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக லாபம் தரும் திருந்திய நெல் சாகுபடி

First Published : 10 Jul 2012 01:13:52 PM IST

நீடாமங்கலம், ஜூலை 9: திருந்திய நெல் சாகுபடியை பயன்படுத்தினால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என்றார் நீடாமங்கலம் வேளாண் உதவி இயக்குநர் ந. இளஞ்செழியன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நீடாமங்கலம் வட்டாரத்தில் பம்பு செட் மூலம் குறுவை நடவு 4 ஆயிரம் எக்டேரில் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. பம்புசெட் மூலம் கிடைக்கும் பாசன நீரைப் பயன்படுத்தி திருந்திய நெல் சாகுபடி முறைகளைக் கடைபிடித்தால் திட்டமிட்டபடி குறுவை நடவை அதிகரிக்க முடியும். இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மண்ணை வளமானதாகச் செய்து, திருந்திய நெல் சாகுபடி முறைகளில் 12 தொழில்நுட்பங்களைக் கடைபிடிப்பதன் மூலம் மாவிற்கு 22 மூட்டைகள் அல்லது ஏக்கருக்கு 4 மெட்ரிக்டன் நெல் எடுக்க முடியும். இதன் மூலம் அதிக லாபமும் விவசாயிகளுக்கு கிடைக்கும். விவசாயிகள் வேளாண் அலுவலர்களைத் தொடர்பு கொண்டு இதுகுறித்த ஆலோசனைகளைக் கேட்டுப் பயன் பெறலாம்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,00:00 IST



**நிலக்கடலை சாகுபடி நுட்பங்கள்:** ஆடிப் பட்டத்திற்கேற்ற ரகங்கள்: முன் ஆடி (ஜூன் - ஜூலை), பின் ஆடி (ஜூலை - ஆகஸ்ட்) பட்டங்களில் மானாவாரியில் சாகுபடி செய்வதற்கு குறைந்த வயது கொத்து ரகங்களை தேர்வு செய்யலாம். டி.எம்.வி.7, டி.எம்.வி.13, வி.ஆர்.ஐ.2, வி.ஆர்.ஐ.6, கோ.4 ஆகியவை 100-105 நாட்கள் வயதுடையவை. இவை யாவும் கொத்து வகைகள். கோ.6, வி.ஆர்.ஐ.7 ஆகிய 125 முதல் 130 நாட்கள் வயதுடைய கொடிகொத்து ரகங்களையும் மானாவாரியில் சாகுபடி செய்யலாம். முன் ஆடியில் இறவையில் பயிரிட்டால் எக்டருக்கு சுமார் 3000 முதல் 3500 கிலோ வரை விளைச்சல் பெறலாம்.

ஒரு எக்டருக்கு 125 கிலோ முதல் 160 கிலோ வரை விதைப்பருப்பு தேவைப்படும்.

டிரைகோடெர்மா விரிடி, டிரைகோடெர்மா ஹார்சியா னம் இவைகளில் ஒன்றை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் விதைநேர்த்தி செய்வதன் மூலம் மண் வழியாகப் பரவும் நோய்களைத் தடுக்கலாம்.

ஒரு எக்டருக்கு தேவையான விதைகளுடன் ரைசோபியம் 600 கிராம், பாஸ்போ பாக்டீரியா 600 கிராம் ஆகியவற்றை அரிசிக்கஞ்சி சேர்த்து கலந்து விதைநேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும். விதைநேர்த்தியை விதைப்பதற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே செய்ய வேண்டும்.

எருது அல்லது டிராக்டரினால் இயக்கப்படும் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தால் உருவாக்கப் பட்ட கோவை விதை விதைக்கும் கருவியைப் பயன்படுத்தி விதைகளை சுமார் 5செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். மானாவாரிப் பட்டத்தில் விதைக்கும் தருணத்தில் மண்ணில் போதுமான ஈரம் இருப்பது அவசியம்.

கொத்து நிலக்கடலை ரகங்களை 30 து 10 செ.மீ. இடைவெளியிலும் அடர் கொத்து ரகங்களை 30 து 15 செ.மீ. இடைவெளியிலும் குழிக்கு ஒரு விதை வீதம் விதைக்க வேண்டும். கொத்து ரகங்களில் ஒரு சதுரமீட்டருக்கு 33 செடிகளும் அடர் கொத்து ரகங்களில் 22 செடிகளும் இருக்குமாறு பராமரிக்க வேண்டும். விதைப்பதற்கு 25-30 நாட்கள் முன்னதாக எக்டருக்கு 10-12 டன் தொழு உரம் இடவேண்டும். பசுந்தாள் உர பயிர்களை வளர்த்து மடக்கி உழுவதன் மூலம் மண்ணின் வளத்தை அதிகரிக்கலாம். மண் ஆய்வு செய்ய இயலாத நிலையில் பொது சிபாரிசாக தழை, மணி, சாம்பல் சத்துக்களை எக்டருக்கு 10:10:45 கிலோ என்ற அளவில் அடியுரமாக இடவேண்டும்.

இறவைப்பயிர் சாகுபடி செய்ய எக்டருக்கு 17:34:54 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை அடியுரமாக இடவேண்டும். 200கிலோ ஜிப்சத்தை அடியுரமாகவும் விதைத்த 45வது நாளில் 200 கிலோ ஜிப்சத்தை மேலுரமாகவும் இட்டு பின் மண் அணைப்பதன்மூலம் காய்பிடிக்கும் திறனை அதிகரிக்கச் செய்து நல்ல திரட்சியான பருப்பினை பெறலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டு சமீபத்தில் வெளியிடப்பட்ட

"நிலக்கடலை ரிச்' என்ற நுண்ணூட்டச் சத்துக்களை வளர்ச்சி ஊக்கிகள் அடங்கிய கலவையை ஒரு சதவீதம் என்ற அளவில் விதைத்த 30வது, 60வது நாட்களில் தெளிக்க வேண்டும். 5 கிலோ நுண்ணூட்டக் கலவையை 500 லிட்டர் நீரில் கரைத்து கைத்தெளிப் பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

**களை நிர்வாகம்**: நிலக்கடலை விதைப்பு செய்தவுடன் நிலத்தில் நல்ல ஈரம் இருக்கும் நிலையில் பென்டிமீத்தலின் களைக்கொல்லி அல்லது புளூகுளோரலின் களைக் கொல்லி இவற்றில் ஏதாவது ஒன்றை எக்டருக்கு 2 லிட்டர் என்ற அளவில் 500 லிட்டர் நீரில் கரைத்து கைத் தெளிப்பான் மூலமாகவோ அல்லது தேவையான மணலுடன் கலந்து நிலத்தின்மீது சீராகத் தூவுவதன் மூலமாகவோ பயிரின் இளம் பருவத்தில் தோன்றும் களைகளைக் கட்டுப்படுத்தலாம். தொடர்ந்து களைகள் முளைப்பதைப் பொறுத்து ஒன்று அல்லது இரண்டு முறை களை பறிக்கலாம். விதைத்த 45வது நாளில் ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். மண்ணில் விழுதுகள் இறங்கியபின் செடிகளை புரட்டாமல் இருப்பது நல்லது. பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்த சிபாரிசுப்படி பூச்சி, பூஞ்சானக் கொல்லிகளைப் பயன்படுத்தி, புரோடீனியா புழு, பச்சைப்புழு, சிவப்பு கம்பளிப்புழு, துரு மற்றும் இலைப்புள்ளி நோய்களை சேதம் விளைவிக்காமல் பராமரிக்கலாம்.

**அறுவடை**: நிலக்கடலையில் காய்களின் உள் ஓடானது 75-80 சதம் கருமை அடைந்திருந்தால் அறுவடை செய்யலாம். செடிகளை நிலத்தைவிட்டு பிடுங்கிய உடன் காய்கள் மேல்பக்கம் இருக்குமாறு போட்டு 2-3 நாட்கள் கழித்து காய்களைப்பறித்து 3-4 நாட்கள் நன்றாக உலர்த்த வேண்டும். ஈரப்பதம் சுமார் 9 சதத்திற்கு குறைவாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(**தகவல்:** முனைவர் பா.மீனாகுமாரி, கு.கணேசமூர்த்தி, எண்ணெய்வித்து துறை, த.வே. பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422-245 0812)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## வெந்தயக்கீரை

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,00:00 IST



முத்தான கீரை வகைகளில் வெந்தயக்கீரையும் ஒன்று. வெந்தயமும் வெந்தயக்கீரையும் அபூர்வ மருத்துவகுணம் கொண்ட சஞ்சீவிக்கீரை எனலாம். வெந்தயம் மிக எளிதாக எல்லா இடங்களிலும், எல்லா காலங்களிலும் கிடைக்கக் கூடியது. வெந்தயக்கீரையை நாமே வீட்டில் வளர்க்கலாம். சுமார் ஆறு அங்குலம் வளர்ந்தஉடன் நாம் இதனை பயன்படுத்தலாம். வெந்தயக்கீரையை சமைக்காமல் பச்சையாக பயன்படுத்தினால் மட்டுமே அதன் பூரண மருத்துவ தன்மை நமக்கு கிடைக்கும். வெந்தயம் உடல் உஷ்ணத்தைக் குறைத்து குளிர்ச்சி தரும் தன்மை கொண்டது. ஒரு கைப்பிடி அளவு வெந்தயக்கீரையுடன் சிறிது கொத்தமல்லி தழை, ஒரு டீ ஸ்பூன் சீரகம், சிறிதளவு பூண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு அரைத்து வடிகட்டி பருகிவந்தால் தேகம் பொலிவுபெறும். உடல் உஷ்ணம் நீங்கும். குடல்புண் ஆற மிகவும் அற்புதமானது. இதில் பொட்டாசியம், கால்சியம், இரும்புச்சத்து நிறைந்தது. வெந்தயக்கீரை கிடைக்காதவர்கள் வெந்தயத்தை 8 மணி நேரம் நீரில் ஊறவைத்து, பருத்தி துணியில் கட்டி வைத்தால் 12 மணி நேரத்தில் அழகாய் முளைத்துவிடும். அதை 6 நாட்கள் நிழலில் உலரவைத்து மிக்சியில் அரைத்து பொடிசெய்து வைத்துக்கொண்டு பனை வெல்லம் சேர்த்து ஒரு டம்ளர் நீரில் கலந்து சாப்பிடலாம். முளைகட்டிய வெந்தயம் பல பிணிகளை தீர்க்கவல்லது. சொரி, சிரங்கு, கரப்பான் மற்றும் தோல் வியாதிகளுக்கு முளைகட்டிய வெந்தயப் பொடியை சோப்பிற்கு பதிலாக பூசி குளிக்க வேண்டும். உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், நீரிழிவு மற்றும் அதிக கொழுப்பை குறைக்க வல்லது. மூலநோய், வாய்ப்புண், பசியின்மை, குடல்புண் ஆகிய வற்றுக்கு மிக சிறந்த நிவாரணம் தரும். இதனை தொடர்ந்து சாப்பிட தேவையற்ற கொழுப்புச்சத்தும், ஊளைச்சதையும் குறையும். வெந்தயத்தில் கறிவேப்பிலையை போன்றே வைட்டமின் ஏ, பி, சி சத்துக்கள் அதிகம் உள்ளது.
வெந்தயக்கீரை பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அதிக ரத்தப்போக்கை நீக்கும் தன்மை கொண்டது. வெந்தயக்கீரை உட்கொள்ள வாயுக் கோளாறால் ஏற்படும்/ஏற்பட்ட குடல் புண் ஆற மிகச்சிறந்த சர்வரோக நிவாரணி ஆகும். பெண்கள் பருவமெய்தாமை, ஒழுங்கற்ற மாதவிடாய், வெள்ளைபடுதல் போன்றவைகளுக்கு முளைகட்டிய வெந்தயப்பொடி ஒரு வரப்பிரசாதமாகும். குடல் சுத்தமாகும். காசநோய்க்கு கண்கண்ட மருந்தாகவும் சஞ்சீவியாகவும் பயன்படுகிறது. சிறிதளவு வெந்தயத்தை தயிரில் இரவில் ஊறவைத்து மறுநாள் காலை மென்று சாப்பிட்டுவர வயிற்றுப் புண்கள் ஆறும். வெந்தயம் நரம்புகளை பலப்படுத்தும் தன்மை கொண்டது. வெந்தயக்கீரை என்பது ஒரு மகாமந்திரக்கீரை என்னும் அளவு அற்புத ஆற்றலைக் கொடுக்கவல்லது. இதனை நாம் உண்டு நோயற்ற வாழ்வு வாழலாம். மேலும் தொடர்புக்கு: பி.வி.கனகராஜன், உடுமலைப்பேட்டை, 9659456279.
-கே.சத்தியபிரபா, உடுமலை.

தென்னையில் ஊடுபயிராக நறுமணப்பயிர்கள்

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,00:00 IST



நறுமணப்பயிர்களில் இஞ்சியும் மஞ்சளும் முக்கியமான ஊடுபயிர்களாகும். முதல் 8 ஆண்டுகளில் இவற்றைத் தோப்புகளில் ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். மானாவாரி சாகுபடிக்கு முன் பருவ மழைக்காலமான ஏப்ரல் மாதமும், இறவைப் பயிருக்கு பிப்ரவரி மாதமும் நடவு செய்ய ஏற்ற காலமாகும். இச்சாகுபடியில் சராசரியாக எக்டருக்கு 7000-8000 கிலோ விளைச்சல் கிடைக்கும். மஞ்சளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியிடப்பட்ட பிஎஸ்ஆர்-1 என்ற ரகம் ஊடுபயிர் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. தென்னையில் மஞ்சளை ஊடுபயிராக சாகுபடி செய்ததில் ரூ.24,701ம், தென்னையை தனிப்பயிராக சாகுபடி செய்ததில் ரூ.22,075ம் கிடைத்துள்ளது.

**கலப்புப்பயிர்கள் சாகுபடி:** தென்னையில் பல ஆண்டுப் பயிர்களைச் சாகுபடி செய்வது கலப்புப்பயிர் சாகுபடி எனப்படும். நல்லமிளகு, ஜாதிக்காய், லவங்கம் மற்றும் வனிலா ஆகியவற்றைத் தென்னந்தோப்புகளில் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்வது மிகவும் லாபகரமானதாகும்.

**நல்லமிளகு:** இந்தியாவின் மேற்கு கடற்கரைப் பிரதேசங்களிலுள்ள தென்னந் தோப்புகளில் நல்லமிளகு கலப்புப்பயிராக சாகுபடியாகின்றது. கரிமுண்டா, பன்னியூர்-2 மற்றும் பன்னியூர்-3 ரகங்கள் கலப்புப் பயிர் சாகுபடிக்கு மிகவும் ஏற்றவை. தென்னையைச் சுற்றியிருக்கும் வட்டப்பாத்தியில் வேர்விட்ட மிளகுக் குச்சியினை நடவுசெய்து மரத்தின் மீது கொடியைப் படரவிட வேண்டும். நடவுசெய்த மூன்றாவது ஆண்டில் நல்லமிளகு காய்ப்புக்கு வரும். சுமார் 7-

8வது ஆண்டுகளில் விளச்சல் உச்சகட்டத்தை அடையும். சராசரியாக ஒரு கொடியிலிருந்து ஒரு கிலோ உலர்ந்த மிளகு கிடைக்கும். மேலும் மிளகுக் கொடிகளைக் கவாத்து செய்து 6 மீ. உயரத்திலேயே வைத்திருந்தால் தேங்காய்களை அறுவடை செய்வதில் தொந்தரவு இருக்காது. நல்ல மிளகுக் கொடிகளும் பாதிப்படையாது.

**லவங்கம்:** இது தென்னந்தோப்புகளில் கலப்புப் பயிராக சாகுபடி செய்யப்படும் மற்றொரு பயிராகும். 1-2 ஆண்டு வயதுடைய லவங்க கன்றுகள் தென்மேற்குப் பருவமழையின் தொடக்கத்தில் இரட்டை வரிசை முறையில் செடிக்குச்செடி 3 மீ இடைவெளியில் நடவு செய்யப்படுகின்றன. நடவு செய்த 5வது ஆண்டில் அறுவடைக்கு வருகின்றன. ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டு அறுவடை செய்யலாம். ஒரு மரத்திலிருந்து சுமார் 750 கிராம் சுருள்பட்டையை விளைச்சலாகப் பெறலாம்.

**கிராம்பு**: நல்ல வடிகால் வசதியுள்ள வளமான மண்வகை கிராம்பு கலப்புப்பயிர் சாகுபடிக்கு ஏற்றது. சுமார் ஒன்றரை ஆண்டு வயதுள்ள விதைக்கன்றுகளை 4 தென்னைக்கு ஒரு கிராம்பு என்ற விகிதத்தில் நடவுசெய்ய வேண்டும். நடவு செய்த 6வது ஆண்டில் பூக்க ஆரம்பித்து, 20வது ஆண்டில் விளைச்சல் உச்சநிலையை அடைகிறது. ஒரு ஆண்டில் ஒரு மரத்திற்கு சராசரியாக 3 கிலோ கிராம்பு கிடைக்கும்.

**ஜாதிக்காய்:** நான்கு தென்னைகளுக்கு நடுவில் ஒரு ஜாதிக்காய் செடி என்ற அளவில் 2 ஆண்டான ஜாதிக்காய் ஒட்டுச் செடிகள் நடப்படுகின்றன. நடவு செய்த 5-8 ஆண்டுகளில் முழு விளைச்சல் கிடைக்கிறது. ஒரு மரத்திலிருந்து சராசரியாக 1500 - 2000 காய்கள் பறிக்கலாம். இவற்றிலிருந்து 8-12 கிலோ ஜாதிக்காய் கொட்டைகளும், 1.5 - 2 கிலோ ஜாதிப்பத்திரியும் கிடைக்கும்.

**வனிலா**: வனிலா கொடிகளை தென்னைக்கு அருகில் நடக்கூடாது. ஏனெனில் தென்னையின் மட்டைகள் விழுந்து கொடிகள் சேதமடையக்கூடும். கொடிகளை நடுவதற்கு 6-8 மாதங்களுக்கு முன் 13-15 மீ உயரமுடைய சீமைக்கொன்றை மரங்களைத் தாங்கு மரங்களாக்க வேண்டும். தென்னை மரங்களுக்கிடையே மூன்று வரிசை வனிலா நடவு செய்யலாம். எக்டருக்கு சுமார் 1000 கிலோ வனிலா பீன்ஸ் விளைச்சலாக கிடைக்கும்.

**பல அடுக்குப்பயிர்கள் சாகுபடி**: இம்முறையை 20 ஆண்டிற்கு அதிகமான வயதுடைய தென்னை மரங்கள் உள்ள தோப்புகளில் பின்பற்றலாம். இந்த பலஅடுக்குப் பயிர்கள் சாகுபடியில் தென்னை, கோகோ, நல்லமிளகு மற்றும் மஞ்சள் ஆகிய நான்கு பயிர்கள் அடங்கும். முதல் அடுக்கில் தரைதளத்தில் மஞ்சளும், இரண்டாவது அடுக்கில் தரையிலிருந்து 3.5 மீ உயரத்தில் கோகோவும், 3வது அடுக்கில் தென்னையும் வளரும். இந்த நான்கு பயிர்களின் வேர்ப்பகுதிகள் ஒன்றோடொன்று தொடர்பற்றவை. இதனால் தண்ணீர் மற்றும் ஊட்டச்சத்து பற்றாக்குறை அவற்றில் ஏற்படுவதில்லை.


**கலப்புப்பயிர் மற்றும் ஊடுபயிர்களில் நீர் மேலாண்மை**: தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத இடங்களில்தான் தென்னையில் ஊடுபயிர்களையும் கலப்புப் பயிர்களையும் சாகுபடி செய்ய

வேண்டும். மானாவாரி தோப்புகளில் குறைந்த வயதுடைய ஓராண்டுப் பயிர்களையும் நீர்ப்பாசன வசதியுள்ள தோப்புகளில் ஓராண்டு மற்றும் பல்லாண்டுப் பயிர்களையும் சாகுபடி செய்யலாம். நீர் பாய்ச்சும்போது தென்னைக்கும் மற்ற பயிர்களுக்கும் தேவையான அளவு மட்டுமே நீர் பாய்ச்ச வேண்டும். அப்போதுதான் பாசன நீரும் விரயமாகாது. தென்னையின் விளைச்சலும் குறையாது. ஊடுபயிர்களும் நன்கு விளையும். கோடையில் நீர்ப்பாசனம் மிகவம் இன்றியமையாத ஒன்றாகும். **ஊடுபயிர் மற்றும் கலப்புப்பயிர்களில் உர மேலாண்மை**: தென்னைக்கும் ஊடுபயிர் மற்றும் கலப்புப் பயிர்களுக்கும் தேவையான உரங்களைத் தனித்தனியே பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் இடவேண்டும். அப்போதுதான் தென்னையின் காய்ப்பும் குறையாது. ஊடுபயிர்களின் விளைச்சலும் குறையாது. ஊடுபயிர்களைத் தொடர்ந்து சாகுபடி செய்யும் இடங்களில் இலை, தழைகள் விழுவதாலும், வேர்கள் மக்குவதாலும் மண்ணின் வளம் கூடி செயற்கை உரங்களின் உபயோகம் குறைகிறது.

எம்.ஞானசேகர்,தொழில் மற்றும் விவசாய ஆலோசகர்,97503 33829.

## முட்டை விலை 4 நாளில் 33 காசுகள் சரிவு

ஜூலை 10,2012,11:50



நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 300 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நான்கு நாளில் முட்டை விலை, 33 காசுகள் சரிந்திருப்பது, கோழிப்பண்ணைØயாளர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 305 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசுகள் குறைத்து, 300 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 4ம் தேதி, 333 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

அதையடுத்து, 5ம் தேதி முட்டை விலை ஒரே நாளில், 13 காசுகள் சரிந்து, 320 காசுகளாக

நிர்ணயிக்கப்பட்டது. 7ம் தேதி, 15 காசுகள் சரிந்து, 305 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. பின், நேற்று ஐந்து காசுகள் சரிந்து, 300 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான்கு நாட்களில், முட்டை விலை, 33 காசுகள் சரிந்திருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:சென்னை, 315 காசுகள், பெங்களூரு, 305 காசுகள், மைசூரு, 302 காசுகள், ஹைதராபாத், 292 காசுகள், மும்பை, 324 காசுகள், விஜயவாடா, 290 காசுகள், கோல்கத்தா, 320 காசுகள், பார்வாலா, 270 காசுகள், டில்லி, 290 காசுகள்.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 40 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## பயிர் பாதுகாப்பு கருவிக்கு மானியம்: உதவி இயக்குனர்

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,01:01 IST

திருச்செங்கோடு: "எலச்சிபாளையம் யூனியனில், மானிய விலையில் பயிர் பாதுகாப்பு கருவிகள் வழங்கப்படுகிறது' என, வேளாண் உதவி இயக்குநர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை:எலச்சிபாளையம் யூனியனில், ஐசோபாம் எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ், பயிர் பாதுகாப்பு கருவிகளான விசைத் தெளிப்பான்கள், கைத் தெளிப்பான்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. பயிர் பாதுகாப்பு மருந்துகளை தேவையான அளவு சரிபார்த்து அடிக்கும் வகையில், விசைத் தெளிப்பான்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.எலச்சிபாளையம் மற்றும் வேலக்கவுண்டம்பட்டி வேளாண் விரிவாக்க மையங்களில், கருவிகள் இருப்பு வைக்கப்பட்டு விற்பணை செய்யப்படுகிறது. விசை தெளிப்பான்களுக்கு, 2,000 ரூபாயும், கைத் தெளிப்பான்களுக்கு, 800 ரூபாயும் மானியம் வழங்கப்படுகிறது.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னையை தாக்கும் ஈரியோஃபைட் நோய்

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,04:08 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தென்னை மரங்களை அதிக அளவில் ஈரியோஃபைட் நோய் தாக்குதலாகி, மரங்கள் வறட்சியை தாக்கு பிடிக்க முடியாமல் காய்ந்து போய் வருகிறது. அதே

நேரம் தேங்காய் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளால், தேங்காய் விவசாயிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களுக்கு அடுத்தபடியாக தோட்டப்பயிர்களில் தென்னை விவசாயத்தில் அதிக அளவில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில், ஏழு ஆயிரத்து 982 ஹெக்டேரில் தென்னை விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

பாலக்கோடு தாலுகா சின்னாறு பகுதியிலும், அரூர் தாலுகா தென்பெண்ணையாற்று பகுதியிலும் அதிக அளவில் தென்னை விவசாயம் நடந்து வருகிறது. இதில், அதிகபட்சமாக அரூர் தாலுகா பகுதியில் அதிக அளவில் தென்னை மரங்கள் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் தேங்காய் வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்கு செல்லும்.

பாலக்கோடு தாலுகா மாரண்டஹள்ளி பகுதியில் உள்ள மரங்களில் இருந்து அதிக அளவில் இளநீருக்கு அறுவடை செய்யப்படுகிறது. இங்கிருந்து கர்நாடகா மாநிலத்துக்கு இளநீர் கோடை காலங்களில் விற்பனைக்கு செல்லும். தேங்காய் பொறுத்த வரையில் உள்ளூர் சந்தையில் தேங்காய் விற்பனை போக மீதி கொப்பரை தேங்காய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 10 ஆண்டுக்கு முன் வரையில், தென்னை விவசாயத்தை பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு லாபம் தரக்கூடியதாக இருந்தது. கடந்த, 1999ம் ஆண்டு முதல் தென்னை மரங்களை அதிக அளவில் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஏற்பட்டது. தொடர்ந்து வறட்சி நிலை உள்ளிட்ட காரணங்களால், கடந்த சில ஆண்டாய் தென்னை விவசாயிகளுக்கு குறிப்பிட்டு சொல்லும்படியான லாபம் பார்க்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த, 1999ம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம் தென்பெண்ணையாற்று படுகை பகுதியான காவேரிப்பட்டணம், அரசம்பட்டி பகுதியில் தென்னை மரங்களில் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஏற்பட்டு, தண்ணீர் மற்றும் காற்று மூலம் தர்மபுரி மாவட்ட தென்னை மரங்களில் ஈரியோஃபைட் எனப்படும் சிலந்தி தாக்குதல் அதிகரித்தது. தமிழகம் முழுவதும் இந்நோய் பரவிய போதும், கடந்த 10 ஆண்டுகளில் இந்நோயை முற்றிலும் ஒழிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்ட தென்னை மரங்களில் இந்த நோய் தாக்குதல் தீவிரம் அடைந்திருப்பதோடு, தற்போது, பருவ மழையில்லாத காரணத்தால், இந் நோய் தாக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் பசுமை இழந்து, தென்னையின் ஆயுள் பாதிக்கப்பட்டு மரங்கள் காய்கள் உற்பத்தி பாதித்து, மரங்களை இறுதியாக வெட்டும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுக்கு முன் 15 முதல் 20 சதவீதம் இந்நோய் தாக்குதல் இருந்தது.

தற்போது, 35 சதவீதத்துக்கும் மேல் இந்நோய் தாக்குதல் ஏற்பட்டிருப்பதால், விவசாயிகள் பெரும் கலக்கத்தில் உள்ளனர். இந்நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் நீண்ட நாள் காத்திருக்க வேண்டிய நிலையில், முறையான மருந்து பராமரிப்பு பணிகள் இல்லாமல், இந்நோய் தாக்கிய மரங்களை வெட்டும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

நோய் தாக்குதல் ஒரு பக்கம் வாட்டும் நிலையில், கடந்த சில மாதங்களாக தேங்காய் விலையும் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த காலங்களை போல் சிறிய ரக தேங்காய் மூன்று மற்றும் நான்கு 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
கோடையில் இளநீர் தேவைக்காக அறுவடை சுறுசுறுப்படைந்து தேங்காய் விலை ஒன்றுக்கு 5 முதல் 8 ரூபாய் இருந்த நிலை தலைகீழாக மாறியிருப்பதால், தர்மபுரி மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் பெரும் கலக்கத்தில் உள்ளனர்.

**மாங்கனி கண்காட்சியில் அழுகிய பழங்கள் விவசாயிகள், பார்வையாளர்கள் அதிர்ச்சி**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் நடந்து வரும் அகில இந்திய மாங்கனி கண்காட்சியில் பார்வையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட பல ரக மாம்பழங்கள் அழுகிய நிலையில் உள்ளன. இதை மாற்ற நடவடிக்கை இல்லாததால், பார்வையாளர்களும் விவசாயிகளும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.
தமிழகளவில் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் மா அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மா விவசாயிகளை ஊக்கப்படுத்தவும், மா சாகுபடி மேம்பாடு பற்றி விவசாயிகள் தெரிந்து கொள்ளவும் தோட்டக்கலைத்துறை சார்பாக கிருஷ்ணகிரியில் ஆண்டு தோறும் மாங்கண்காட்சி நடத்தப்படுகிறது.
ஆரம்ப காலத்தில் கண்காட்சியில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதால் ஏராளமான விவசாயிகள் பயன் அடைந்தனர். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக இந்த கண்காட்சி வருமானம் ஈட்டும் நோக்கில் வியாபார மையமாகவும், பொழுது போக்கும் நிகழ்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.
இதனால், மாங்கனி கண்காட்சிக்கு வரும் விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்லும் நிலை உள்ளது. கடந்த மாதம் 24ம் தேதி கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், 20வது மாங்கனி கண்காட்சி துவங்கியது.
இதில், அரசு சார்பாக, 50க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் அமைக்கப்பட்டது. முக்கியமாக கண்காட்சிக்கு வரும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மா ரகங்களை பற்றி தெரிந்து கொள்ள தோட்டக்கலைத்துறை சார்பாக அமைக்கப்பட்டிருந்த ஸ்டாலில் பல ரகங்களை சேர்ந்த மாம்பழங்கள் வைக்கப்பட்டிருந்தது.
ஒவ்வொரு ரகத்துக்கும், ஐந்து முதல் 10 மாம்பழங்கள் வரை வைக்கப்பட்டு இருந்தது. தினம் கண்காட்சிக்கு வரும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், குழந்தைகள் ஆர்வத்துடன் பார்த்து சென்றனர்.இந்த நிலையில் ஸ்டாலில் வைக்கப்பட்டிருந்த மாம்பழங்கள் நீண்ட நாட்களாக மாற்றப்படாமல் இருந்ததால், அழுக துவங்கியது. அழுகிய மாம்பழங்களை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
பார்வைக்கு வைக்கப்பட்ட மா ரகங்கள் ஒரு வாரம் மட்டுமே தாக்கு பிடிக்கும் நிலையில்,

கண்காட்சி துவங்கப்பட்ட நிலையில் வைத்த மாம்பழங்கள் அழுகி தற்போது, அதன் தன்மை நிறம் அனைத்தையும் இழந்து பரிதாபமாக காட்சியளிக்கிறது. அதிக அளவில் அழுகிய மாம்பழங்கள் மற்றும் அகற்றப்பட்டுள்ளது. அதற்கு மாற்றாக பழங்கள் வைக்கப்படவில்லை.மாங்கனி கண்காட்சி என்ற பெயரில் விவசாயிகளுக்கு பயன் அற்றதாக மாறி வரும் நிலையில், பார்வையாளர்களுக்கு வைக்கப்படும் மா ரகங்களை புதிதாக வைக்கவும், அந்த ரகங்கள் குறித்த தகவல், விளையும் இடங்கள், உற்பத்தி திறன், மாவில் உள்ள சத்துக்கள் உள்ளிட்ட எந்த தகவலும் இல்லாமல் அழுகிய மாம்பழங்கள் அடங்கிய ஸ்டாலாக மாறி வருவது விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.இது குறித்து தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் பெரியசாமி கூறியது: கடந்த 24ம் தேதி மாங்கனி கண்காட்சி துவங்கிய போது, தோட்டக்கலைத்துறை சார்பாக விவசாயிகள், பொதுமக்கள் மாம்பழ ரகங்களை தெரிந்து கொள்ள ஸ்டால் அமைக்கப்பட்டது.

இதில் ஏராளமான மா ரகங்களை சேர்ந்த மாம்பழங்களை வைத்திருக்கிறோம். இதில் அழுகிய பழங்களை அகற்றி வருகிறோம். இதனால், குறைவாக உள்ள மாம்பழ ரகங்களை நாளை முதல் அதிகளவில் வைக்க உள்ளோம்.

## கறவை மாடு காப்பீட்டு தொகை வழங்கல்

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,03:30 IST

ஊட்டி:நீலகிரி மாவட்டத்தில், "இப்கோ டோக்கியோ' பொது காப்பீட்டு நிறுவனத்தின் மூலம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களுக்கு, கறவை மாடு காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி நடுவட்டம், கெந்தொரை, தங்காடு, ஓரநள்ளி தொடக்க வே ளாண்மை கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களுக்கு 1.10 லட்சம் ரூபாய் மதிப்பில், கறவை மாடு காப்பீட்டு தொகையை, இணைப்பதிவாளர் வனிதா வழங்கினார்.

இதற்கான நிகழ்ச்சியில், நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் அறிவழகன், பொதுமேலாளர் தேவராஜ், நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் ராம்குமார், இப்கோ டோக்கியோ விற்பனை மேலாளர் ஆனந்த் சுப்ரமணியம், முகவர் மோகன்ராஜ் கலந்து கொண்டனர்.

**மல்லிகை சாகுபடி அதிகரிக்க பயிற்சி: வேளாண் அறிவியல் நிலையம் முடிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,01:51 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் மலர் செடிகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மல்லிகை பூக்களின் மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிப்பதென வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்துள்ளது.
இதுகுறித்து வம்பன் வேளாண் அறவியல் நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கை:புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை, முந்திரிக்கு அடுத்தபடியாக மலர் செடிகள் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக திருவரங்குளம், ஆலங்குடி, கொத்தமங்கலம், கீரமங்கலம், கறம்பக்குடி உள்ளிட்ட பகுதிகளில் மலர் செடிகள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் முனைப்புடன் உள்ளனர்.
அப்பகுதிகளில் கிட்டத்தட்ட 30 ஹெக்டேரில் மல்லிகை, ரோஜா, கோழிக்கொண்டை, சம்பங்கி, வாடாமல்லி, மரிக்கொழுந்து உள்ளிட்ட மலர் செடிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மல்லிகை செடிகள் மூலம் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது.

இந்நிலையில் மல்லிகைச் செடிகள் ஒருவித பூச்சித் தாக்குதலுக்கு உள்ளாகி பொலிவிழந்து வருவதோடு, மகசூலும் குறைவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளது. மல்லிகை செடிகளை தாக்கும் பூச்சிகள் குறித்து வம்பன் வேளாண் அறிவியல் நிலைய அதிகாரிகள் ஆய்வு செய்ததில் மொட்டுப்புழு, இலைப்பேன், தத்துப்பூச்சி, செஞ்சிலந்தி ஆகியவை தாக்குவது தெரியவந்தது.

இதையடுத்து மல்லிகைச் செடிகளை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும், மேலாண்மை மூலம் தரமான மல்லிகைப் பூங்களின் மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு ஒருநாள் இலவச பயிற்சி அளிப்பதென வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்துள்ளது.
வரும் 17ம் தேதி காலை 10 முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் மலர் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் பங்கேற்கலாம்.
பயிற்சிக்கு வரும் விவசாயிகள் பூச்சி தாக்குதலுக்கு உள்ளான மல்லிகைச் செடிகளை கொண்டு வந்தால் அவை எந்த வகையான பூச்சிகள் என்பது குறித்தும், அவற்றை ஒழிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படும்.
இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**எண்ணெய்வித்து பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் : விலை உச்சத்தை தொட்டதால் திடீர் மனமாற்றம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,22:16 IST

கருத்தை பதிவு செய்ய

திருக்கோவிலூர் : எண்ணெய்வித்து பொருட்களின் விலை எந்த ஆண்டும் இல்லாத அளவில் உச்சத்தை தொட்டுள்ளதால் கரும்பு, நெல் நடவு செய்துவந்த திருக்கோவிலூர் பகுதி விவசாயிகள் மணிலா, எள் உள்ளிட்ட பயிர்களுக்கு மாறும் சூழல் உருவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. கரும்பு டன் ஒன்றுக்கு 2,000 ரூபாய் என அரசு அறிவித்தவுடன் போட்டி போட்டுக்கொண்டு விவசாயிகள் கரும்பு பயிர் செய்வதில் ஆர்வம் காட்டினர். இதனால் கடந்த மூன்று ஆண்டுகளாக மானாவாரியில்கூட கரும்பு பயிரிடப்பட்டதால் எங்கு பார்த்தாலும் கரும்பு வயலாக காட்சியளித்தது. இப்பகுதியில் அதிகளவில் பயிர் செய்யப்பட்டுவந்த மணிலா, எள், கம்பு போன்ற எண்ணெய்வித்து பயிர் விளைச்சல் பெருமளவில் குறைந்தது.

விவசாயிகள் ஒட்டுமொத்தமாக கரும்பு பயிர்செய்ததால் வெட்டுக் கூலி டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்வரை அதிகரித்துள்ளது. ஆட்கள் கிடைக்காமை, உரம் விலை அதிகரிப்பு, தண்ணீர் பிரச்னை, லாரி வாடகை, இதர செலவுகள் போக வாங்கிய கடனுக்கு வட்டிகூட கட்டமுடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். கரும்பு பயிர் இனித்த காலம் மாறி கசக்கும் காலம் வந்து விட்டது. இந்நிலையில் மானாவாரியில் குறைந்த தண்ணீரைக் கொண்டு, குறைவான செலவில், மனித உழைப்பு அதிகமின்றி பயிர் செய்யும் மணிலா, எள் உள்ளிட்ட பொருட்களின் விலை சமீபகாலமாக உச்சத்தை தொட்டிருப்பது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் நேற்று எள் 80 கிலோ மூட்டை ஒன்று 5,470 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. குறைந்த விலையாக 4500 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. இதேபோல் மணிலாவின் விலையும் அதிகரித்தது. ஒரு மூட்டை 5,000 ரூபாய்க்கு உயர்ந்தபட்ச விலையாக ஏலம் போனது. இதனால் மானாவாரியில் எண்ணெய்வித்து பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மணிலா, எள் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளதால் வரும் காலங்களில் இதன் விலை மேலும் அதிகரிக்ககக் கூடும் என்பதால் அடுத்த போக சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் எண்ணெய்வித்து பயிர்களை பயிர் செய்தால் சந்தையில் கூடுதல் விலையை பெறமுடியும் என்ற உத்தரவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் மணிலா, கரும்பு போன்ற பயிர்கள் செய்துவந்த விவசாயிகள் எண்ணெய்வித்து பயிர் செய்வதில் ஆர்வத்தை செலுத்தி வருகின்றனர். இதுநாள் வரை கரும்பு, நெல் நடவுசெய்து சோர்ந்துபோய் உள்ள விவசாயிகளுக்கு புத்துணர்வு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

## மரக்கன்றுகள் நடும் திட்டம்

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,02:22 IST

வேதாரண்யம்: வேதாரண்யம் சட்டசபை தொகுதியை சேர்ந்த எஸ்.எச்., 63 சாலையில் தமிழக முதல்வரின் பசுமை சாலை திட்டத்தில் ஆயிரம் மரகன்றுகள் நடும் திட்டத்தை எம்.எல்.ஏ., காமராஜ் துவக்கி வைத்தார்.

வேதாரண்யம் தொகுதியில் உள்ள இந்த சாலைகள் பலவகையான ஆயிரம் மரகன்றுகள் நடப்படவுள்ளன. இதே போல் தகட்டூர், தாணிக்கோட்டகம் ஆகிய பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட்டது. வேதாரண்யம் தாசில்தார் புண்ணியக்கோடி, நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் ரவி, உதவி பொறியாளர் முருகானந்தம், சாலை ஆய்வாளர்கள் ராஜேந்திரன், கவிதா, சுமதி, பஞ்சாயத்து தலைவர்கள் வேதையன், குஞ்சாளிமரைக்காயர், வீரமணி, ஒன்றிய கவுன்சிலர் சுப்ரமணியன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகள் கவனத்திற்கு

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,21:27 IST

வேடசந்தூர் : நடப்பு பருவத்திற்கு புகையிலை நாற்று விட ஆகஸ்ட் மாதம் சிறந்த காலமா கும். வேடசந்தூர் மத்திய புகையிலை ஆராய்ச்சி நிலையத்தில் புகையிலை விதை தயாராக உள்ளன. வரும் 18 ம் தேதி முதல் அலுவலக வேலை நாட்களில் காலை 8 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 2 மணி முதல் 4 மணி வரையிலும் விற்பனை நடைபெறும். நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் வேண்டுவோர் தலைவர், மத்திய புகையிலை ஆராய்ச்சி நிலையம், வேடசந்தூர்(04551- 260 243) தொடர்பு கொள்ளலாம் என நிலைய தலைவர் சாமி தெரிவித்தார்.

## வாழைக்கு "பனோல்' ஆயில் மானியத்தில் வழங்க பரிந்துரை

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,23:23 IST

தேனி : வாழையில் ஆண்டு முழுவதும் காஞ்சாரை நோய் தாக்குதல் ஏற்படுவதால், வாழை விவசாயிகளுக்கு மானியத்தில், "பனோல்' ஆயில் வழங்க தோட்டக்கலைத்துறை பரிந்துரை செய்துள்ளது.

தமிழகம் முழுவதும் வாழை சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு, காஞ்சாரை நோய் பெரும்

சிக்கலை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பிட்ட சீசனில் மட்டும் இந்நோய் தாக்கும் என்ற நிலை மாறி, தற்போது வெயில், மழை, பனிக்காலங்களிலும் நோய் தாக்குதல் ஏற்படுகிறது.
காஞ்சாரை நோயை கட்டுப்படுத்த பெட்ரோலிய பொருளான "பனோல்' ஆயில் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது மார்க்கெட்டில் இது எளிதில் கிடைப்பதில்லை. இதனால் வாழை விவசாயிகள் வேறு வகையான பல்வேறு வேதிமருந்துகளை பயன்படுத்தி வருகின்றனர். வாழை விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத வகையில் "பனோல்' ஆயிலை மானியத்தில் வழங்க வேண்டும், என தோட்டக்கலைத்துறை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

## வாழைப்பழம் விலை உயர்வு விவசாயிகளுக்கு லாபம் குறைவு

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2012,01:31 IST

திற்பரப்பு : குமரி மாவட்டத்தில் வாழைத்தார்கள் விலை அதிகரித்தும் விவசாயிகளுக்கு போதிய லாபம் கிடைக்கவில்லை.குமரி மாவட்டத்தில் தற்போது வாழைக்தார்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது ஏத்தன் வாழைப்பழம் ஒன்று பத்து ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதுபோல் செந்துழுவன், ரசகதளி போன்ற வாழைப்பழங்களும் கடந்த ஆண்டைவிட விலை இருமடங்கு அதிகமாக விற்கப்படுகிறது.ஏத்தன் வாழைத்தார் கிலோ ஒன்றிற்கு 48 ரூபாய் விற்கும் நிலையில் மார்க்கெட்டுகளில் வரத்து மிக குறைவாகவே உள்ளது. கடந்த சில மாதங்களாக மாவட்டத்தில் நிலவிய வெயிலின் தாக்கம் மற்றும் அண்மையில் வீசிய சூறாவளிக்காற்று போன்ற காரணங்களால் விளைச்சல் பாதிப்பும், தொடர்ந்து வாழைகள் முறிந்து சேதமும் ஏற்பட்டதே வாழைத்தார் வரத்து குறைய காரணம் என கூறப்படுகிறது. வாழைத்தார் விலை அதிகமாக இருப்பினும் தற்போது உள்ள செலவுகளை கணக்கிடும் போது விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைப்பதில்லை. நடவு செலவு, பராமரிப்பு செலவு, உரத்தின் கட்டுப்பாடற்ற விலை உயர்வு என செலவுகள் பலமடங்கு அதிகரித்து வரும் நிலையில் இயற்கை சீற்றம் மூலம் ஏற்படும் இழப்பு தாங்க முடியாத அளவில் உள்ளது. எனவே வாழைத்தார்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டாலும் எங்களுக்கு லாபம் மிக குறைவாகவே உள்ள என திற்பரப்பை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறினார். வாழைத்தார் விலை ஏற்றம் குறித்து வாழைப்பழ வியாபாரி ஒருவர் கூறியதாவது: அதிக விலை கொடுத்து வாழைத்தார் வாங்கி கடைகளில் பழம் விற்க முடியாத நிலை உள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் ஓணம் பண்டிகை வரும் என்பதால் விலை அதிகரிக்கவே வாய்ப்புள்ளது. கடந்த ஆண்டு ஒரு கிலோ ஏத்தன் வாழைக்காய் 28 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது 48 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வாழைப்பழம் பயன்படுத்தி செய்யப்படும் பலகாரங்கள் எவ்வாறு விற்பது என தெரியாமல் உள்ளோம். மாவட்டத்தில் கிடைக்கும் சத்தான உணவு பொருளான வாழைப்பழம் உற்பத்தியில் போதிய சலுகைகள் வழங்க அரசு முன்வர வேண்டும். உரத்தின் கட்டுப்பாற்ற விலை உயர்வு, இயற்கை சீற்றத்திற்கு வழங்கும் நிவாரணம் போன்ற

விஷயங்களில் அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து வாழை விவசாயிகளுக்கு வாழ்வு கொடுப்பதோடு மாவட்ட மக்களுக்கு சத்தான உணவு கிடைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வியாபாரி தெரிவித்தார்.

---

தினகரன்

## வரத்து குறைவு எதிரொலி மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ 1000 வரை விலை உயர்வு

பதிவு செய்த நேரம்:2012-07-10 10:36:21

ஆத்தூர், : சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டையில் ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், சேலம், நாமக்கல் மாவட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சள், பருத்தி, மாக்காச்சோளம் மற்றும் எண்ணெய் வித்து பொருட்கள் ஆகியவை வாரம் தோறும் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 1,500 மூட்டைகள் வந்தன. விரலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ3,500 முதல் ரூ6,399 வரையும், உருண்டை ரகம் ரூ3,000 முதல் ரூ4,700 வரையும் விற்பனையானது. மொத்தம் ரூ40 லட்சத்துக்கு ஏலம் போனது. கடந்த முறை நடந்த ஏலத்தை விட குவிண்டாலுக்கு ரூ1000 வரை கூடுதலாக விற்பனையானது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இதுகுறிந்து வியாபாரிகள் கூறியதாவது: தற்போது பருவ மழை தள்ளி போய் உள்ளதால், புதிய மஞ்சளின் வரத்து காலமும் தள்ளி போகும் நிலை ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில், தற்போது இருப்பில் உள்ள மஞ்சளின் வரத்தும் வெகுவாக குறைந்துள்ளது. இதுவே விலை ஏற்றத்துக்கு காரணம்.இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.